மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.13/2014

வாக்குமூலம்.. வா.சா. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாத்தையா | ஜாதி | |
| த/பெ. | வீரபாபு | மதம் | |
| கிராமம் | | | |
| தாலுகா | | வயது | 60/2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 14-03-2023 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலம் வாதி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. என்ன வழக்கு வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எந்த வருடம், வாதி குடும்பத்தினர், கடலை சாகுபடி செய்தார்கள் என்றால் நான் சின்னப்பிள்ளையாக இருக்கும்போது செய்தார்கள்.

2. தாவா சொத்தை , 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கி, வருவாய் துறையினர் மூலம் அளந்து கல்லுக்கால் ஊன்றிய விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி யாரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது.
3. 1 ம் பிரதிவாதி தாவா சொத்தை சுப்பிரமணியனிடம் கிரையம் பெற்ற போது பழைய வீடு இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்து, 1 ம் பிரதிவாதி கிரையம் பெறும்போது வீடு இருந்தது என்றாலும், தாவா சொத்து நத்தம் வகைப்பாட்டு நிலம் என்றாலும், நான் சொல்வது போல் வாதி குடும்பத்தினர் கடலை சாகுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. 1 ம் பிரதிவாதி, கிரையம் வாங்குவதற்கு முன்போ, பின்போ வாதிக்கு தாவா சொத்தில் அனுபவம் இல்லை என்றாலும், நான் வாதிக்கு வேண்டப்பட்டவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றாலும், வாதி சச்சிதானந்தம் தான் அழைத்து வந்தார் என்றாலும் சரிதான். வாதி மொத்தம், எத்தனை அயிட்டசொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்தின் புல எண்

எனக்கு தெரியாது. வாதி என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளார் என்றால் இடத்திற்காக தான் என்று சொன்னார்கள். தாவா வழக்கில் யார், யார் பிரதிவாதிகள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்ன கட்சி செய்கிறார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கு அருகில், என் வீடு இருப்பதாக நான் சொல்லியிருப்பதில் என் வீடு உள்ள இடத்தில் புல எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. என் வீட்டின் கதவு எண்.11/1 ஆகும். நான் தாவா சொத்திற்கு அருகில் குடியிருந்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

3. வாதி, குடும்பத்தினர், அனுபவத்தில் இருந்ததை காட்ட ஆவணம் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் வாதியின் குடும்பத்தினர் கடலை சாகுபடி செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், தாவா சொத்தை வாதி குடும்பத்தினர் எந்த காலத்திலும் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி சுப்பையா பிள்ளைக்கு தாவா சொத்தில் 50 செண்டு பாத்தியம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. அதில் மேல்புற 31 செண்டை சுப்பையா பிள்ளையும் அவரது தாயார் சிவகாமி அம்மாளும் 26.03.1974-ல் செல்லையா பிள்ளை மனைவி உண்ணாமலை அம்மாள், செல்லையா மகன் சுப்பிரமணியன் ஆகியோருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. கிரையம் கொடுத்தது போக மீதம் 19 செண்டை சுப்பையாபிள்ளை அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. அது காடாக தான் கிடக்கிறது.

5. தாவா சொத்தை வாதி குடும்பத்தினர்தான் வேலிகருவை மரங்களை வெட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் சொல்லி உள்ள அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. வாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**